# பண்ணை மாதரிகளுக்கு அதியமான் அறைகூவல்!!!

அன்று ஆண்டவர்கள் தானந்தந்த கோவணத்து
காடுகளின் அதிபர் என்ற ஆணவத்தில்
அதிகாரத் தோரணையில் இட்டுடுவர் கட்டளைகள்
மின்னல் வேகத்தில் நிறைவேற்ற தப்பித் தவறிவிட்டால்
வாயிக்கு வந்ததெல்லாம் வார்த்தை என வசைபாடி
நொடிப்பொழுதில் சீற்றம் கொண்டு சீறிப் பாய்ந்திடுவார்
தேய்ந்த உன் தேகம் நிலை குலைய.

கண் அயரா இவர் கழனியிலே இரவு பகல் பாராமல்
மாடாய் உழைத்து ஓடாய் தேய்ந்தவனே
இவர் வீட்டு நாயிக்கு கூட சுடு கஞ்சி ஊற்றுபவர்
சுருங்கிய உன் கும்பிக்கு கொல்லைப்புற
மாட்டுத் தொழுவத்திலே தேங்காய் சிரட்டையிலே
எட்ட நின்று கரைத்து ஊற்றிடுவர் பழைய சோறு

காலமெல்லாம் காலடியில் கிடந்து
கயவர்களின் காடுகளில் கண்ணிலே உயிர்வைத்து
முதுகொடிக்கும் கடும்பனியில் தளாளாத நிலைகண்டு
உயிரே உன் மீது பரிவு கொண்டு
உனை பிரிந்து நீ மாண்டால் உன் சடலத்தைக்கூட வீதியிலே
எடுத்துச் செல்ல அனுமதிக்கா அக்கிரமக்காரர் இவர்
கடுகளவும் நன்றியில்லா காரால வம்சத்தினர்

பிறந்த பிள்ளை முதலில் "அம்மன் அப்பன்" என
விழிப்பதுவே இயற்கை நியதி
ஆனால் இவர் வீட்டு மழலைக்கு பண்ணையிலே
உழுது உழைக்கும் அருந்ததியப் பெருமகனை
"வாடா சக்கிலிய சின்னான்" என விளிக்க ஊட்டும்
சாதிய கழிசடையே முதல் பால பாடம்
இப்பாடத்தில் உச்சி குளிர்ந்து சுகம் காணும் இழி பிறவி

பல் போன பார்ப்பனனை வசை பாடும் முற்போக்கு
பண்ணையிலே அருந்ததிய பாலகனை பதறடிக்க
வதை செய்யும் புறம்போக்கு

ஊர் சன்னதியில் வீற்றுருக்கும் அம்மன் அருள் கிட்ட
அருந்ததிய பெரும்மக்கள் அரை காத தூரம்
ஒதுங்கி நின்று வணங்கு என உத்தரவு போட்டிடுவர்
இக்கலியுகத்து வெள்ளாள சூத்திரர்கள்

ஆதிக்க சக்திகளை அடியோடு வேரறுத்து
பண்ணையிலே அகப்பட்டு அல்லலுறும்
அருந்தமிழன் உனை மீட்டு பட்டணத்து
சீமையிலே பணியமர்த்த காத்திருக்கு நீலப்படை

சுட்டெரிக்கும் சூரியனின் கடும் வெயிலில்
வெந்து வெதும்பி கருத்து புண்பட்ட
உன் மேனிக்கு புனிகு தடவ வந்திட்டான் ஆதித்தமிழன்

பிறந்த பிள்ளை முதலில் "அம்மன் அப்பன்" என
விழிப்பதுவே இயற்கை நியதி
ஆனால் இவர் வீட்டு மழலைக்கு பண்ணையிலே
உழுது உழைக்கும் அருந்ததியப் பெருமகனை
"வாடா சக்கிலிய சின்னான்" என விளிக்க ஊட்டும்
சாதிய கழிசடையே முதல் பால பாடம்
இப்பாடத்தில் உச்சி குளிர்ந்து சுகம் காணும் இழி பிறவி

பல் போன பார்ப்பனனை வசை பாடும் முற்போக்கு
பண்ணையிலே அருந்ததிய பாலகனை பதறடிக்க
வதை செய்யும் புறம்போக்கு

ஊர் சன்னதியில் வீற்றுருக்கும் அம்மன் அருள் கிட்ட
அருந்ததிய பெரும்மக்கள் அரை காத தூரம்
ஒதுங்கி நின்று வணங்கு என உத்தரவு போட்டிடுவர்
இக்கலியுகத்து வெள்ளாள சூத்திரர்கள்

ஆதிக்க சக்திகளை அடியோடு வேரறுத்து
பண்ணையிலே அகப்பட்டு அல்லலுறும்
அருந்தமிழன் உனை மீட்டு பட்டணத்து
சீமையிலே பணியமர்த்த காத்திருக்கு நீலப்படை

சுட்டெரிக்கும் சூரியனின் கடும் வெயிலில்
வெந்து வெதும்பி கருத்து புண்பட்ட
உன் மேனிக்கு புனிகு தடவ வந்திட்டான் ஆதித்தமிழன்